## ஜனவரி – 14 – ஞாயிறு

### குழந்தை இயேசு

### இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி (யோவா 1:36)

-----------------------------------------------------------------

### முதல் வாசகம் : 1 சாமுவேல் 3 : 3 – 10, 19

கடவுளின் விளக்கு இன்னும் அணையவில்லை. கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்தில் சாமுவேல் படுத்திருந்தார். அப்போது ஆண்டவர், "சாமுவேல்" என்று அழைத்தார். அதற்கு அவன், "இதோ! அடியேன் என்று சொல்லி, ஏலியிடம் ஓடி, இதோ! அடியேன் என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அதற்கு அவர், "நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள் என்றார். அவனும் சென்றுபடுத்துக் கொண்டான். ஆண்டவர் மீண்டும் "சாமுவேல்" என்று அழைக்க, அவன் ஏலியிடம் சென்று, இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அவரோ, நான் அழைக்க வில்லை மகனே! சென்று படுத்துக்கொள்" என்றார். சாமுவேல் ஆண்டவரை இன்னும் அறியவில்லை. அவனுக்கு ஆண்டவரின் வார்த்தை இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. மூன்றாம் முறையாக ஆண்டவர் "சாமுவேல்" என்று அழைத்தார். அவன் எழுந்து ஏலியிடம் சென்று" இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அப்பொழுது சிறுவனை ஆண்டவர்தாம் அழைத்தார் என்று ஏலி தெரிந்துகொண்டார். பின்பு ஏலி சாமுவேலை நோக்கி சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ "ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்" என்று பதில் சொல்" என்றார். சாமுவேலும் தம் இடத்திற்குச் சென்று படுத்துக் கொண்டான். அப்போது ஆண்டவர் வந்து நின்று, "சாமுவேல்" சாமுவேல்" என்று முன்பு போல் அழைத்தார். அதற்கு சாமுவேல், "பேசும், உம் அடியேன் கேட்கிறேன்" என்று மறு மொழி கூறினான். சாமுவேல் வளர்ந்தான் ஆண்டவர் அவனோடு இருந்தார் சாமுவேலது வார்த்தை எதையும் அவர் தரையில் விழவிடவில்லை.

**பதில்பாடல் :** உம் திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே இதோ வருகிறேன்

### இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 6:13 –15,17 - 20

சகோதர சகோதரிகளே! "வயிற்றுக்கென்றே உணவு, உணவுக் கென்றே வயிறு. "இவை இரண்டையுமே கடவுள் அழித்து விடுவார். உடல் பரத்தைமைக்கு அல்ல, ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர். ஆண்டவரை உயிர்த்தெழச் செய்த கடவுள் தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார். உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்று தெரியாதா? கிறிஸ்துவின் உறுப்புகளை எடுத்து ஒரு விலை மகளின் உறுப்புகளாகும்படி நான் செய்யலாமா? கூடவே கூடாது. ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார். எனவே பரத்தைமையை விட்டு விலகுங்கள். மனிதர் செய்யும் எப்பாவமும் உடலுக்குப் புறம்பானது. ஆனால் பரத்தைமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கெதிராகவே பாவம் செய்கின்றனர். உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே, உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்.

### நற்செய்தி : யோவான் 1 : 35 - 42

அக்காலத்தில் யோவான் தம் சீடர் இருவருடன் மீண்டும் அங்கு நின்று கொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள் "என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் "அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார். "மெசியா" என்றால் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு அவரைக் கூர்ந்து பார்த்து, "நீ யோவானின் மகன் சீமோன். இனி "கேபா" எனப்படுவாய் என்றார். "கேபா" என்றால் "பாறை" என்பது பொருள்.

**தியானம்:** பாவியர் எம்மை மீட்க கடவுளின் மகன் இவ்வுலகிற்கு வந்தார். அவரின் வழியை இறைவன் பல விதங்களில் ஆயத்தம் செய்தார், நமது வீட்டிற்கு விருந்தினர் வருகிறார்கள் என்றால் நாம் பல வழிகளில் ஆயத்தம் செய்கிறோம். வீட்டை அழகாக வைத்திருப்போம். விதம் விதமான சுவையான உணவை தயாரிப்போம். இவ்வாறுதான் தமது மகனை அனுப்புமுன் இறைவனும் பலரை தயார் செய்கிறார். கருவறைக்கு அன்னை மரியாள். பாதுகாவலராக புனித சூசையப்பர். வழியை ஆயத்தம் செய்ய யோவான்.இன்றைய நற்செய்தியில் யோவானால் யேசு சுட்டிக்காட்டப் படுகிறார். அதனைக் கேட்டு அவர் பின் சென்றவர்கள் யேசுவை மெசியா என கண்டு கொள்கிறார்கள். நாமும் அவர் பின்னே செல்ல அழைக்கப் பட்டிருக்கின்றோம். நாமும் மெசியாவை கண்டோமா? அழைப்பு என்பது பலதரப்பட்டது. முதல் வாசகத்தில் சாமுவேல் அழைக்கப்பட்டபோது அவரால் அந்த அழைப்பை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர் சிறுவனாக இருந்தார். கடவுளின் அழைப்பும் நமக்கு எந்த வயதிலும் கிடைக்கலாம், எந்த நிலையிலும் கிடைக்கலாம். அதனை ஏற்று அதன்படி வாழ்வதே நமது கடமை. அதனை நாம் சரிவர செய்கிறோமா? 2ம் வாசகத்தில் கூறப்படுவதுபோல் நமது உடலை நாம் தூய்மையாக வைத்திருக்கின்றோமா? இன்று வயது வேறுபாடின்றி பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து காணப்படுகின்றன. மறைக்கப்பட்ட, பல நிகழ்வுகள் வெளிச்சத்திற்கு வந்த வண்ணம் உள்ளன. மனதை உடலை கட்டுப்படுத்தமுடியாமல் இடம் பெறுகின்ற குற்றச் செயல்கள் கொலையில்கூட முடிவடைகின்றன. சிறு குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் என்று பலரும் இதனால் பாதிக்கப் படுகிறார்கள். பார்வையில், பேச்சில், செயலில் பாலியல் தொல்லையால் பாதிக்கப் பட்டவர்கள் ஏராளம். இப்படிப்பட்ட குற்றம் புரிபவர்கள் தமது உடலையும், மனதையும் கறைபடுத்துகிறார்கள் என்று இன்றைய 2ம் வாசகத்தில் நாம் பார்க்கிறோம்.. இவர்களுக்காக நாம் விசேடமாக செபிப்போம். நம்மை தேடி வந்தவர் எல்லோரின் பாவக் கறைகளையும் கழுவி சுத்த மாக்கட்டும். பலியான செம்மறியே, பாவங்கள் எல்லாம் சுமந்து தீர்த்தவரே உமக்கு நன்றி!